Ours bank with
Bank of Baroda

மதுரை மணி
Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
2, Town Hall Road, Madurai-625 001.

மதுரை பதிப்பு | *மணி 54 | * ஓசை 47 | உள்ளூர் - 16.02.2026 | திங்கள் | விலை ரூ.3/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com
Madurai Edition | *Vol 54 | * Issue 47 | வெளியூர் - 17.02.2026 | செவ்வாய் | Price Rs. 3/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

**கப்பல் படையில் 260 காலியிடங்கள்** | **ஏ.ஐ. உச்சி மாநாடு... குவியும் உலக தலைவர்கள்** | **ராகு கேதுவின் செல்வாக்கால், இவர்களுக்கு ஜாக்பாட்...!** | **7 ஆண்டுகளில் இல்லாத அகவிலைப்படி உயர்வு?**

## ஏ.ஐ. உச்சி மாநாடு: குவியும் உலக தலைவர்கள்! பிரதமர் மோடி பெருமிதம்!

புதுடில்லி, பிப். 16–

ஏ ஐ தொழில்நுட்ப துறையில் இந்தியா முன்னணியில் உள்ளது என பிரதமர் மோடி தெரிவித்து உள்ளார்

செயற்கை நுண்ணறிவு ( ஏ ஐ ) குறித்த சர்வதேச உச்சிமாநாட்டை புதுடில்லியில் ( பிப்ரவரி 16 ) மாலை ஐந்து மணிக்கு பிரதமர் மோடி தொடங்கி வைக்கிறார் . இது குறித்து சமூக வலைதளத்தில் பிரதமர் மோடி வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது : டில்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் இன்று முதல்




ஐந்து நாட்களுக்கு இந்தியா சார்பில் ஏ ஐ உச்சிமாநாடு நடக்கிறது . இந்த உச்சி மாநாட்டிற்கு உலகெங்கிலும் உள்ள உலகத் தலைவர்கள் ,தொழில்துறைத் தலைவர்கள் , ஆராய்ச்சியாளர்கள் மற்றும் தொழில்நுட்ப ஆர்வலர்களை நான் அன்புடன் வரவேற்கிறேன். ஏ ஐ தொழில்நுட்பம் இன்று சுகாதாரம் , கல்வி , விவசாயம் உட்பட பல துறைகளை மாற்றியமைத்து வருகிறது . இந்த உச்சிமாநாட்டில் பல்வேறு அம்சங்கள் குறித்து விவாதங்கள் நடைபெற இருக்கின்றன . இந்தியாவின் நூற்று நாற்பது கோடி மக்களுக்கு நன்றி தெரிவித்து கொள்கிறேன். நமது நாடு ஏ ஐ தொழில்நுட்ப துறையில் முன்னணியில் உள்ளது . டிஜிட்டல் , ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் மற்றும் அதிநவீன ஆராய்ச்சி நிறுவனங்கள் வரை , ஏ ஐ துறையில் நமது முன்னேற்றம் பிரதிபலிக்கிறது . இவ்வாறு பிரதமர் மோடி கூறியுள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில், வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் இயந்திர வாடகை சேவையினை வலுப்படுத்த 13 கோடியே 28 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாக கொள்முதல் செய்யப்பட்ட 10 டிராக்டர்கள், சுழற்கலப்பைகள், தடமாடும் நெல் உலர்த்தும் இயந்திரங்கள், சட்டிக்கலப்பைகள், 11 சக்கர வகை நெல் அறுவடை இயந்திரங்கள் போன்ற இணைப்புக்கருவிகள் உட்பட 672 இயந்திரங்கள் மற்றும் கருவிகளை விவசாயிகளின் பயன்பாட்டிற்காக வழங்கிடும் வகையில் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம். வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் வதட்சிணாமூர்த்தி, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர் த.ஆபிரகாம், வேளாண்மை இயக்குநர் பா.முருகேஷ், வேளாண்மைப் பொறியியல் துறை தலைமைப் பொறியாளர் இரா. முருகேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில் பழம்பெரும் நடிகை எம் என் ராஜமுக்கு 2024–ஆம் ஆண்டிற்கான கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதினையும், மூத்த திரைப்பட இயக்குநர் திரு.எஸ்.பி. முத்துராமன் அவர்களுக்கு 2025–ஆம் ஆண்டிற்கான கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதினையும் வழங்கி சிறப்பித்தார். இந்த நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன், எம்.என்.ராஜம் மற்றும் எஸ்.பி. முத்துராமன் ஆகியோரது குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில், உயர்கல்வித் துறை சார்பில், அரசு பொறியியல் கல்லூரிகள், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் ஆகியவற்றில் 542.02 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வகுப்பறை கட்டடங்கள், ஆய்வகக் கட்டடங்கள், பணிமனை கட்டடங்கள், மகளிர் விடுதிக் கட்டடம், திறன்மிகு மையங்கள் போன்ற பல்வேறு கல்விசார் கட்டடங்களை திறந்து வைத்தார். மேலும், 555.92 கோடி ரூபாய் மதிப்பீட்டில அரசு பொறியியல் கல்லூரிகள், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு கட்டப்படவுள்ள கூடுதல் வகுப்பறை கட்டடங்கள், பல்நோக்கு அரங்குகள், விடுதிகள் மற்றும் இதர கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், உயர்கல்வித் துறை செயலாளர் பொ. சங்கர், கல்லூரி கல்வி ஆணையர் எ. சுந்தரவல்லி, தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் ச.விசாகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாட்டில் 2 நாட்கள் அதிரடி

# பொருளாதார ஆய்வறிக்கை வெளியீடு வெளியாகும் இடைக்கால பட்ஜெட்

## தேர்தல் களம் பரபரப்பு!

சென்னை,பிப். 16–

தமிழ்நாட்டு அரசியல் களம் அடுத்த 2 நாட்களுக்கு பரபரப்பாக இருக்கப்போகிறது, இன்று பொருளாதார ஆய்வறிக்கையை முதல்வர் முக.ஸ்டாலின் தலைமையிலான அரசு வெளியிட உள்ளது, நாளை இடைக்கால பட்ஜெட் அறிக்கையை நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்ய உள்ளது. தமிழ்நாட்டில் சட்டமன்ற தேர்தல் நடக்க இருக்கும் வேளையில் பொருளாதார ஆய்வறிக்கையின் மூலம் தமிழ்நாட்டின் வளர்ச்சி அளவீட்டை ஸ்டாலின் அரசு மக்களுக்கு எளிதாக காட்ட முடியும். இதேபோல் நாளை சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் பட்ஜெட் மூலம் தேர்தல் நேரத்தில் மக்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் சாதகமான அறிவிப்புகள் வெளியாகலாம் என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது. ஏற்கனவே முதல்வர் முக. ஸ்டாலின் மகளிர் உரிமை தொகை திட்டத்திற்கு அடுத்த ஆட்சியில் 2000 ரூபாய் அளிப்பதாக அறிவித்து தேர்தல் பரபரப்பை கிளப்பினார். இந்த நிலையில் பொருளாதார ஆய்வறி க்கையும், இடைக்கால பட்ஜெட் அறிக்கையும் வெளியாகிறது.




**பொருளாதார ஆய்வறிக்கை :**

தமிழ்நாடு அரசு இன்று (பிப்ரவரி 16) இரண்டாவது பொருளாதார ஆய்வறிக்கையை வெளியிட உள்ளது. இது மாநில திட்டக்குழு தயாரித்த ஆவணமாகும். இந்த பொருளாதார ஆய்வறிக்கை ஏன் முக்கியம் என்றால், இந்த அறிக்கையில் முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான அரசின் கீழ் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி அளவீடுகளும், அடுத்த ஆண்டுக்கான வளர்ச்சி விகிதம் எப்படியிருக்கும், இதேபோல் ஐடி துறை துவங்கி விவசாயம் வரையில் ஒவ்வொரு துறையிலும் எத்தகைய மாற்றங்கள் நடைபெற்றுள்ளது, இத்துறைகள் எந்த அளவுக்கு வளர்ச்சி அடைந்துள்ளது என்பதை காட்டும். பட்ஜெட்க்கு முன்பும், சட்டமன்ற தேர்தலுக்கு முன்பும் வெளியிடப்படுவதால் இந்த பொருளாதார ஆய்வறிக்கை மிகவும் முக்கியமானதாக உள்ளது. இந்த ஆய்வறிக்கையில் நிதித் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் தரவுகள் இணைக்கப்பட்டு இருக்கும். 2வது ஆய்வறிக்கையில் சிறப்பு இணைப்பாக பெண்களின் பங்கேற்பு குறித்து தனி பிரிவு இடம்பெற வாய்ப்புள்ளது. இது தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி, தொழில் வளர்ச்சி, வேலைவாய்ப்பு, வருவாய், செலவு போன்றவற்றை விரிவாக ஆராயும் முக்கிய ஆவணமாகும். இது தான் திமுக அரசின் சட்டமன்ற தேர்தலுக்கான டிரம்ப் கார்ட் ஆக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாடு பொருளாதாரம் தமிழ்நாடு பொருளாதாரம் கடந்த 10 ஆண்டுகளாக தேசிய சராசரியை விட சிறப்பாக செயல்பட்டு வருகிறது. 2012–13 முதல் 2023–24 வரை தமிழ்நாட்டின் உண்மை வளர்ச்சி விகிதம் சராசரியாக 6.37% ஆக இருந்தது. தேசிய சராசரி வளர்ச்சி அளவு 6.1% தான். 2024–25–ல் தமிழ்நாட்டின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (GSDP) 11.2% வளர்ச்சி கண்டது என்று ரிசர்வ் வங்கி அறிக்கை கூறுகிறது. இந்த ஆய்வறிக்கை தமிழ்நாட்டின் பொருளாதார வலிமையை மீண்டும் உறுதிப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாடு பட்ஜெட் நாளை (பிப்ரவரி 17, 2026) தமிழ்நாடு சட்டப்பேரவை காலை 9.30 மணிக்கு கூடுகிறது. தமிழ்நாடு நிதி துறை அமைச்சர் தங்கம் தென்னரசு 2026–27–க்கான இடைக்கால பட்ஜெட்டை தாக்கல் செய்ய உள்ளார். ஏப்ரல் மாதத்தில் சட்டமன்ற தேர்தல் நடைபெற உள்ள நிலையில், இது கடைசி கூட்டத் தொடராக இருக்கலாம். எனவே இடைக்கால பட்ஜெட் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

**மக்கள் எதிர்பார்ப்பு;**

இடைக்கால பட்ஜெட்டில் என்னென்ன அறிவிப்புகள் வரும்? என பல்வேறு தரப்பினரும் காத்திருக்கின்றனர். பெண்கள் நலத் திட்டங்கள், வேலைவாய்ப்பு, விவசாயம், தொழில், கல்வி, சுகாதாரம், உள்கட்டமைப்பு, பெண்கள் பங்கேற்பு போன்றவை முக்கியமாக இருக்கலாம். தேர்தல் நெருங்கும் நிலையில், மக்களுக்கு நேரடி பயன் தரும் அறிவிப்புகள், நிதி ஒதுக்கீடுகள், சலுகைகள் இருக்கும் எதிர்பார்க்கப்படுகின்றன. தேர்தல் தேதி இம்மாத இறுதியிலோ அல்லது அடுத்த மாத முதல் வாரத்திலோ அறிவிக்கப்படலாம் என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது.

இந்த இரண்டு நாட்களும் தமிழ்நாட்டு மக்களுக்கு மிக முக்கியமானவை. சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, திருநெல்வேலி போன்ற நகரங்களில் உள்ள மக்கள், விவசாயிகள், தொழிலதிபர்கள், இளைஞர்கள், பெண்கள் அனைவரும் இந்த ஆய்வறிக்கை மற்றும் பட்ஜெட்டை கவனமாக பார்க்கின்றனர். பொருளாதார ஆய்வறிக்கை தமிழ்நாட்டின் வளர்ச்சியை உறுதிப்படுத்தினால், அது மக்களுக்கு நம்பிக்கை அளிக்கும். இடைக்கால பட்ஜெட்டில் தமிழ்நாட்டு மக்களின் நீண்ட நாள் எதிர்பார்ப்புகளான வேலைவாய்ப்பு, கல்வி, சுகாதாரம், சாலை, மின்சாரம், குடிநீர், பெண்கள் நலன் போன்றவற்றுக்கு என்ன ஒதுக்கீடு வரும் என்பது முக்கியம். தேர்தல் காலத்தில் இந்த அறிவிப்புகள் மக்களின் வாக்கு முடிவை பாதிக்கும். தமிழ்நாட்டு குடும்பங்கள் இப்போது பொருளாதாரம், பட்ஜெட், தேர்தல் ஆகியவற்றை கவனமாக கண்காணிக்கின்றனர். இந்த இரண்டு நாட்களும் தமிழ்நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் முக்கிய தருணங்கள்.

## யார் மனதையும் புண்படுத்தும் நோக்கம் எனக்கு இல்லை-நயினார் நாகேந்திரன்!



மதுரை, பிப். 13–

மதுரையில் என்டிஏ பொதுக்கூட்டத்திற்கு பந்த ல்கால் நடப்பட்ட பிறகு நயி னார் நாகேந்திரன் செய்தியா ளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறி யதாவது:– யார் மன தையும் புண்படுத்தும் நோக்கம் எனக்கு இல்லை. நான் யார் மனதும் புண்படக்கூ டாது என நினைப்பவன். திமுக கூட்டணியில் தான் பிளவு இருக்கிறதே தவிர தேசிய ஜனநாயக கூட்டணி யில் பிளவு இல்லை. திமுக வரு த்தம் தெரிவிக்க வேண்டும் என தினந்தோறும் மாணி க்கம் தாகூர் பேட்டி கொடுத்து வருகிறார். திமுக கூட்டணி தான் வலுவாக இல்லை. எங்கள் அண்ணன் இபிஎஸ் மற்றும் பல கூட்டணி கட்சிகளால் பாஜக பலமாக உள்ளது. இபிஎஸ் தலை மையில் நல்லாட்சி மலரும். முதலில் விஜய் கட்சிக்கு கொள்கை இருக்கிறதா? அப்படி இருந்தால் அந்த கொள்கைகளை தெளிவாக காட்டட்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## தமிழ்நாடு சட்டப்பேரவையில் அமைச்சர் ஆய்வு..!



சென்னை, பிப். 16–

தமிழக சட்டப்பேரவையில் (பிப். 17) 2026–27 ஆம் நிதியாண்டுக்கான தமிழ்நாடு இடைக்கால நிதிநிலை அறிக்கை செய்யப்பட உள்ளது. சட்டப்பேரவையில் அமைச்சர் எ.வ. வேலு ஆய்வு செய்தார். பேரவை உறுப்பினர்கள் அனைவரும் நாளை வரவுள்ளதால் சட்டப்பேரவை மேசை, மைக், இருக்கைகள் என செய்யப்பட்டுள்ள அனைத்து முன்னேற்பாடுகளையும் ஆய்வு செய்தார். உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியனும் உடனிருந்தார்.

## தலையங்கம் — மதுரை மணி

திங்கட்கிழமை 16.02.2026

விசுவாவசு தமிழ் வருடம்

மாசி மாதம் 04-ம் தேதி

# டியர் 90ஸ் கிட்ஸ் உஷாரா இருங்க!!




உலகமே தற்போது Gen Z தலைமுறையினர் குறித்து தான் பரபரப்பாக பேசி வருகிறது. 1997 ஆம் ஆண்டிலிருந்து 2012 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் பிறந்தவர்களை Gen Z ஜென் ஸீ தலைமுறையினர் என அழைக்கிறோம். தற்போது வேலைவாய்ப்பு சந்தையில் அதிகமான எண்ணிக்கையில் ஜென் ஸீ தலைமுறையினர் தான் இருக்கின்றனர். Gen Z தலைமுறையினரின் அணுகுமுறையே முந்தைய தலைமுறையோடு ஒப்பிடும்போது முற்றிலும் மாறுபடுகிறது. முதலில் தன்னுடைய நலன் என்பதை முன்னிலைப்படுத்தி தான் ஜென் ஸீ தலைமுறையினர் செயல்படுகின்றனர். வேலை வாய்ப்பு ,படிப்பு, செலவினம், சேமிப்பு என ஒவ்வொரு பிரிவிலும் ஜென் ஸீ தலைமுறையினரின் செயல்பாடு அனைவரையும் பேச வைக்கிறது.


இந்நிலையில் தங்கத்தை இவர்கள் எப்படி பார்க்கிறார்கள் என்பது குறித்த ஒரு ஆய்வு வெளியாகியிருக்கிறது. பாரம்பரியமாகவே இந்தியர்களுக்கு தங்கத்தின் மீது அதீத காதல் உண்டு. நம்முடைய மூதாதையர் தொடங்கி தற்போது உள்ள தலைமுறைகள் வரை கையில் பணம் சேர்ந்தாலே

தங்கத்தை நகையாக வாங்கி வைத்து விடுவார்கள். குடும்பமாகவே தங்கத்தை சேமிப்போம். தற்போது உள்ள ஜென் ஸீ தலைமுறையினர் தங்கத்தை எப்படி வாங்குகிறார்கள் ?என்பது குறித்த ஆய்வினை Smytten PulseAI என்ற அமைப்பு நடத்தி இருக்கிறது. இந்தியா முழுவதும் நடத்தப்பட்ட இந்த ஆய்வில் ஜென் ஸீ இளைஞர்கள் மத்தியிலும் தங்கத்திற்கு முக்கியத்துவம் இருப்பது தெரிய வந்திருக்கிறது. ஆனால் தங்கத்தை அவர்கள் வாங்கும் முறை முந்தைய தலைமுறையோடு ஒப்பிடும்போது மாற்றம் அடைந்திருக்கிறது. கிட்டத்தட்ட 5000 பேரிடம் இந்த அமைப்பு ஆய்வு நடத்தி இருக்கிறது.

அவர்களில் ஏராளமானவர்கள் தங்கம் வாங்குவது ஒரு ஸ்மார்ட்டான தேர்வு என கூறியிருக்கிறார்கள். அதாவது குடும்ப பாரம்பரியமாக தங்கத்தை வாங்க கூடாது அது நிதி மேலாண்மையின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும் என்ற அணுகுமுறைக்கு ஜென் ஸீ தலைமுறையினர் வந்திருக்கின்றனர். உங்கள் கையில் தற்போது 25 ஆயிரம் ரூபாய் இருக்கிறது எதில் முதலீடு செய்வீர்கள் என கேட்டதற்கு 62% பேர் தங்கத்தில் முதலீடு செய்வோம் என கூறியிருக்கிறார்கள். 15 சதவீதம் பேர் மியூச்சுவல் ஃபண்டுகளிலும், 13 சதவீதம் பேர் ஃபிக்சட் டெபாசிட்டுகளிலும் முதலீடு செய்வோம் என்றும் கூறியிருக்கின்றனர். 7 சதவீதம் பேர் பங்குச்சந்தையிலும் 2 சதவீதம் பேர் கிரிப்டோவிலும் முதலீடு செய்வோம் என தெரிவித்திருக்கின்றனர்.

நிலையற்ற பொருளாதார சூழல்களில் எந்த முதலீடு உங்களுக்கு பாதுகாப்பு தரும் என்ற கேள்விக்கு 66% பேர் தங்கம் தான் பாதுகாப்பு தருகிறது என பதில் அளித்து இருக்கிறார்கள். அந்த வகையில் ஜென் ஸீ தலைமுறையினர் மத்தியிலும் தங்கம் நீங்கா இடம் பிடித்திருக்கிறது தெரிய வந்திருக்கிறது. 67 சதவீதம் பேர் குடும்பத்தினர் சொல்கிறோம் என்பதற்காக நாங்கள் தங்கம் வாங்குவதில்லை எங்களுடைய சொந்த ஆய்வுகளை நடத்தி அதன் அடிப்படையில் தான் தங்கம் வாங்குகிறோம் என தெரிவிக்கின்றனர். ஜென் ஸீ தலைமுறையினர் பெரும்பாலும் ஐந்து கிராமுக்கும் குறைவான அளவுக்கு தான் தங்கம் வாங்குகிறார்கள்.

# அனைத்து ரேஷன் அட்டைதாரர்களுக்கு ரூ.2,000 கோடைக்கால சிறப்பு உதவித்தொகை..!!





சென்னை, பிப். 16–

தமிழக அரசு அண்மையில் வழங்கிய ரூ.2,000 கோடைக்கால சிறப்புத் தொகை தொடர்பாக, தற்போது ஒரு புதிய அரசியல் நகர்வு கோட்டை வட்டாரத்தில் உற்று நோக்கப்படுகிறது. இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்ட போது, தகுதி இருந்தும் பல்வேறு தொழில்நுட்பக் காரணங்களால் சுமார் 90 லட்சம் குடும்பத் தலைவிகளுக்கு இந்த நிதி சென்றடையவில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதனால் ஏற்பட்டுள்ள மக்கள் அதிருப்தியை சரி செய்யும் பொருட்டு, விடுபட்டவர்களுக்கும் அந்தத் தொகையை வழங்க தமிழக அரசு அதிரடி ஆலோசனையில் இறங்கியுள்ளதாக தகவல்கள் கசிகின்றன.

“தகுதியிருந்தும் எங்களுக்கு ஏன் பணம் கிடைக்கவில்லை?” என்ற கேள்வியோடு, விளிம்புநிலை மக்கள் ஆயிரக்கணக்கில் முதலமைச்சரின் தனிப்பிரிவுக்கு மனுக்களை அனுப்பி வருகின்றனர். கோடை வெயிலின் தாக்கம் ஒருபுறம், அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு மறுபுறம் எனப் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள சாமானிய மக்கள், இந்த ரூ.2,000 தங்களுக்கு ஒரு மிகப்பெரிய வாழ்வாதார உதவியாக இருக்கும் என நம்புகின்றனர். மக்களின் இந்தத் தொடர் கோரிக்கைகள் அரசின் கவனத்தை ஈர்த்துள்ள நிலையில், இதற்கான தீர்வை எட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக தெரிகிறது. விடுபட்ட தகுதியுள்ள குடும்பங்களைக் கண்டறிந்து, அவர்களுக்கும் இந்தச் சிறப்பு நிதியை விரைந்து வழங்க வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வருகிறது. வரவிருக்கும் தேர்தல் காலச் சூழல் மற்றும் மக்களின் நியாயமான கோரிக்கைகளைக் கருத்தில் கொண்டு, இதற்கான நிதியை ஒதுக்கீடு செய்வது குறித்து நிதியமைச்சகம் மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறையினரிடையே தீவிரப் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. இதற்கான ஒப்புதல் கிடைத்தால், விடுபட்ட லட்சக்கணக்கான குடும்பங்களின் வங்கிக் கணக்கிற்கு விரைவில் ரூ.2,000 வரவு வைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ராகு கேதுவின் செல்வாக்கால், இந்த ராசிகளுக்கு பொற்காலம்; ஜாக்பாட்..!





வேத ஜோதிடத்தில் நிழல் கிரகங்கள் என்று அழைக்கப்படும் ராகு மற்றும் கேது, தோராயமாக ஒவ்வொரு 18 மாதங்களுக்கும் தங்கள் ராசிகளை மாற்றுகிறார்கள். இந்த ஆண்டு நிகழும் இந்த ராகு–கேதுவின் அம்சம் பன்னிரண்டு ராசிகளில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தும், குறிப்பாக 4 ராசிகளின் வாழ்க்கையில் நல்ல அதிர்ஷ்டத்தையும் அரச நாட்களையும் கொண்டு வரும்.

### மேஷம்

2026 இல் ராகு–கேது பெயர்ச்சி மேஷத்திற்கு நல்லதாக இருக்கும். பதினொன்றாவது வீட்டில் ராகுவின் செல்வாக்கு காரணமாக, உங்கள் வருமானத்தில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு இருக்கும். இந்த நேரத்தில் நீண்டகால ஆசைகள் நிறைவேறும். சமூகத்தில் உங்கள் மரியாதை மற்றும் கௌரவம் அதிகரிப்பது மட்டுமல்லாமல், வேலையில் பதவி உயர்வு பெறுவதற்கான வலுவான வாய்ப்புகளும் உள்ளன. எதிர்பாராத நிதி ஆதாயங்கள் உங்கள் நிதி நிலையை மேலும் வலுப்படுத்தும்.

### மிதுனம்

மிதுன ராசிக்கு, இந்த பெயர்ச்சியை ஒரு பொற்காலத்தின் தொடக்கம் என்று அழைக்கலாம். வாழ்க்கையில் இருந்த நிச்சயமற்ற தன்மைகள் நீங்கி, நேர்மறையான மாற்றங்கள் காணப்படும். புதிய தொழில்களைத் தொடங்க இதுவே சிறந்த நேரம். வெளிநாட்டுப் பயணம் செய்ய கனவு காண்பவர்களுக்கு இந்தக் காலகட்டத்தில் வாய்ப்புகள் கிடைக்கும். கேதுவின் அருளால், ஆன்மீக எண்ணங்கள் அதிகரிக்கும், மன அமைதி கிடைக்கும்.

### விருச்சிக ராசி

விருச்சிக ராசியினருக்கு, இந்த பெயர்ச்சி ஆடம்பரமான வாழ்க்கைக்கான கதவைத் திறக்கும். ராகு உங்கள் ராசியின் ஐந்தாவது வீட்டில் சஞ்சரிப்பது கல்வி மற்றும் காதல் வாழ்க்கையில் பெரும் வெற்றியைத் தரும். சொத்து வாங்குதல் அல்லது பழைய சொத்து தொடர்பான தகராறுகள் தீர்க்கப்பட்டு நீங்கள் பயனடைவீர்கள். குழந்தைகளிடமிருந்து நல்ல செய்திகள் கேட்கப்படும், மேலும் படைப்பு வேலைகளில் ஈடுபடுபவர்களுக்கு நல்ல தளம் கிடைக்கும்.

### மீனம்

ராகு–கேது பெயர்ச்சி மீன ராசியினருக்கு அனைத்து விதமான முன்னேற்றத்தையும் தரும். உங்கள் ஆளுமையில் புதிய வளர்ச்சி ஏற்படும், தன்னம்பிக்கை அதிகரிக்கும். நிதி முதலீடு செய்ய இது ஒரு நல்ல நேரம், பங்குச் சந்தையில் லாபகரமான பலன்களை எதிர்பார்க்கலாம். திருமண வாழ்க்கையில் இனிமை இருக்கும், மேலும் உங்கள் குடும்பத்தினரின் ஆதரவுடன் நீங்கள் பெரிய சாதனைகளைப் பெறுவீர்கள்.

### ராஜ யோகத்தின் பலன்

ஜோதிடத்தில் ராகுவும் கேதுவும் அசுப கிரகங்களாகக் கருதப்பட்டாலும், அவர்கள் உபச்சாய ஸ்தானங்களில் காணப்படுகையில், அவர்கள் ராஜ யோகத்தைப் போன்ற பலன்களைத் தருகிறார்கள். 2026 ஆம் ஆண்டு இந்த பெயர்ச்சி உயர் அந்தஸ்தைக் கொண்டுவரும், குறிப்பாக ரியல் எஸ்டேட், ஐடி மற்றும் அரசியல் துறைகளில் இருப்பவர்களுக்கு. ராகுவின் செல்வாக்கின் காரணமாக, எதிர்பாராத திருப்பங்கள் உங்களுக்கு சாதகமாக வரும், மேலும் சவால்களை வாய்ப்புகளாக மாற்றும் சக்தி உங்களுக்கு இருக்கும். இந்த காலகட்டத்தில், துர்கா தேவியை வழிபடுவதும், ஏழைகளுக்கு உணவு விநியோகிப்பதும் கிரகங்களின் எதிர்மறைத் தாக்கங்களைக் குறைத்து உங்கள் செல்வத்தை அதிகரிக்கும்.

ஒட்டுமொத்தமாக, 2026 ஆம் ஆண்டு இந்த கிரக இயக்கம் இந்த நான்கு ராசிக்காரர்களுக்கும் அதிர்ஷ்டமான ஆண்டாக இருக்கும், இது எல்லா வகையான மகிழ்ச்சியையும் மகிழ்ச்சியையும் தரும்.

# ஹோலி பண்டிகைக்கு முன்னதாக அரசு ஊழியர்களுக்கு 7 ஆண்டுகளில் இல்லாத அகவிலைப்படி உயர்வு?




சென்னை, பிப். 16–

அரசு ஊழியர்கள் தங்களுக்கான அகவிலைப்படி உயர்வு எப்போது வெளியாகும் என காத்திருக்கிறார்கள். மத்திய அரசு ஊழியர்களுக்கு ஆண்டுதோறும் இரண்டு முறை அகவிலைப்படி என்பது உயர்த்தி வழங்கப்படுகிறது. 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை அரசு ஊழியர்களின் அடிப்படை சம்பளம் மாற்றி அமைக்கப்படுகிறது. இந்த இடைப்பட்ட காலத்தில் பல்வேறு பொருட்களின் விலைவாசி உயர்கிறது. வாழ்க்கை செலவினங்கள் அதிகரிக்கின்றன. இதனை அடிப்படையாகக் கொண்டு அடிப்படை சம்பளத்தில் ஒரு குறிப்பிட்ட சதவீத தொகையை அகவிலைப்படியாக சேர்த்து வழங்குகிறார்கள். அந்த வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி முதல் ஜூன் மாதம் வரையிலான ஆறு மாத காலத்திற்கும், ஜூலை முதல் டிசம்பர் வரையிலான ஆறு மாத காலத்திற்கும் என இரண்டு முறை அகவிலைப்படி உயர்த்தி வழங்கப்படும். வழக்கமாக ஜனவரி மாதத்திற்கான அகவிலைப்படி உயர்வு அறிவிப்பு பிப்ரவரி மாத இறுதி அல்லது மார்ச் மாத தொடக்கத்தில் வெளியாகும். ஜனவரி மாதத்தில் இருந்து அரியர் தொகையாக அகவிலைப்படி சேர்த்து வழங்கி விடுவார்கள்.

இந்த ஆண்டு ஜனவரி மாதத்திற்கான அகவிலைப்படி உயர்வு குறித்து எதிர்பார்ப்பு அதிகரித்து இருக்கிறது. ஏனெனில் ஏழாவது சம்பள கமிஷன் முடிவுற்று எட்டாவது சம்பள கமிஷன் தற்போது நடைமுறைக்கு வந்திருக்க வேண்டும். ஆனால் எட்டாவது சம்பள கமிஷன் இதுவரை நடைமுறைக்கு வரவில்லை. இந்த சூழலில் அதிருப்தியில் இருக்க கூடிய மத்திய அரசு ஊழியர்களுக்கு அரசு மிக சிறந்த அகவிலைப்படி உயர்வை வழங்கும் என்று எதிர்பார்ப்பு நிலவுகிறது. கடந்த ஆண்டு ஜூலை முதல் டிசம்பர் வரையிலான காலத்திற்கு 3 சதவீத அகவிலைப்படி உயர்வு வழங்கப்பட்டது. தற்போது மத்திய அரசு ஊழியர்கள் அவர்களின் அடிப்படை சம்பளத்தில் 58% தொகையை அகவிலைப்படியாக பெறுகிறார்கள். தற்போது அவர்களுக்கு இது இரண்டு சதவீதமாக இருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏனெனில் கடந்த ஆண்டு ஜனவரி முதல் ஜூன் மாதத்திற்கு 2 சதவீதம் அகவிலைப்படி உயர்வு வழங்கப்பட்டது. அத்துடன் அண்மையில் வெளியான பணவீக்க தரவுகளும் எதிர்பார்க்கப்பட்ட அளவை விட குறைவாகவே இருக்கிறது. எனவே 2% அகவிலைப்படி உயர்வு வழங்கப்பட்டால் மொத்த அகவிலைப்படி 60%ஆக உயரும். இப்போது அடிப்படை சம்பளம் 30000 ரூபாயாக இருக்கும் அரசு ஊழியருக்கு அகவிலைப்படி 18000 ரூபாயாக இருக்கும். இதற்கு முன்பு 2000ஆம் ஆண்டில் அரசு ஊழியர்களுக்கு ஜனவரியில் 1% தான் அகவிலைப்படி உயர்த்தி வழங்கப்பட்டது. அதன் பின்னர் 2018, 2025 ஆகிய ஆண்டுகளில் ஜனவரியில் 2% அகவிலைப்படி உயர்த்தப்பட்டது. மற்ற சமயங்களில் எல்லாம் 2%க்கும் மேல் தான் அகவிலைப்படி வழங்கப்பட்டது. இந்த ஆண்டு எவ்வளவு அகவிலைப்படி உயர்வு கிடைக்கும் என்ற தகவல் ஹோலி பண்டிகைக்கு முன்னதாக தெரிந்துவிடும்.

# திருப்பதி போறீங்களா? பயணிகளுக்கு ரயில்வே வழங்கிய அதிரடி அப்டேட்!




ராமேஸ்வரம், பிப். 16–

ராமேஸ்வரம் மற்றும் திருப்பதி இடையே வாரத்திற்கு மூன்று நாட்கள் இயக்கப்பட்டு வந்த எக்ஸ்பிரஸ் ரயில் இனி வரும் நாட்களில் நான்கு நாட்களுக்கு இயக்கப்படப் போவதாக மத்திய ரயில்வே அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மத்திய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் வெளியிட்டுள்ள அறிவிப்பில், இதுவரை வாரத்திற்கு மூன்று நாட்கள் மட்டுமே ராமேஸ்வரம் டூ திருப்பதி ரயில் இயங்கி வந்த நிலையில், தற்போது பக்தர்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று வாரத்தில் நான்கு நாட்கள் ரைளை இயக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தைச் சேர்ந்த மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் உள்ளிட்டோரின் கோரிக்கையை ஏற்று, இந்திய ரயில்வே வாரியம் பக்தர்களின் இந்த கேரிக்கைக்கு அனுமதி வழங்கியுள்ளது.

இந்த ரயில் எண்கள் 16779 (திருப்பதி – ராமேஸ்வரம் – TPTY RMM EXP) மற்றும் 16780 (ராமேஸ்வரம் – திருப்பதி – RMM TPTY EXP) ஆகும். இந்த ரயில்கள் தற்போது ஞாயிற்றுக்கிழமை , வியாழக்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமை ஆகிய நாட்களில் ராமேஸ்வரத்தில் இருந்தும், அதேசமயம் திருப்பதியில் திங்கட்கிழமை, வெள்ளிக்கிழமை மற்றும் சனிக்கிழமை ஆகிய நாட்களில் இருந்தும் இயக்கப்பட்டு இருந்த நிலையில், இனி வரும் காலங்களில் கூடுதலாக ஒரு நாள் சேர்க்கப்பட்டு வாரம் நான்கு நாட்களுக்கு இந்த ரயில்கள் இயக்கப்பட உள்ளது. மேலும் கூடுதல் நாள் எந்த கிழமைகளில் இயக்கப்படும் என்பது குறித்த தகவல் கூடிய விரைவில் ரயில்வே வாரியத்தால் அறிவிக்கப்படும்.

இந்த ரயில் சுமார் 808 முதல் 846 கி.மீ. தூரத்தை 17–18 மணி நேரத்தில் கடக்கிறது. அதுமட்டுமின்றி இந்த ரயில் ராமேஸ்வரத்தில் இருந்து மாலை 16:55க்கு கிளம்பி, திருப்பதிக்கு மறுநாள் காலை 10:10க்கு சென்றடையும். அதேபோல் இந்த ரயில் திருப்பதி இருந்து காலை 11:55கக்கு கிளம்பி, மறுநாள் அதிகாலை 04:35க்கு ராமேஸ்வரம் சென்றடையும்.

இந்த ரயில் ராமேஸ்வரம், மண்டபம், ராமநாதபுரம், பரமக்குடி, மானாமதுரை, மதுரை, கொடைக்கானல் சாலை, திண்டுக்கல், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், பாபநாசம், கும்பகோணம், கும்பகோணம், சிதம்பரம், திருப்பதிரிபுலியூர், விழுப்புரம், திருவண்ணாமலை, போளூர், ஆர்னி சாலை, வேலூர் கான்ட், காட்பாடி, பகலா, திருப்பதி உள்ளிட்ட முக்கிய நிலையங்களில் நிற்கிறது.

ராமநாதசுவாமி கோயில் மற்றும் திருப்பதி ஏழுமலையான் தரிசனத்திற்கு செல்லும் பக்தர்களுக்கு இது பெரும் வசதியாக அமையும். இதற்கான கட்டணம் ஸ்லீப்பர் பிரிவில் ரூ.450, மூன்றாம் ஏசி பிரிவில் ரூ.1190 கட்டணமாக வசூலிக்கப்படும். பயணிகள் IRCTC இணையதளம் அல்லது ரயில்வே செயலியில் புதுப்பிக்கப்பட்ட அட்டவணையை சரிபார்த்து டிக்கெட் முன்பதிவு செய்துக் கொள்ளலாம். அதுமட்டுமின்றி கூட்ட நெரிசலை தவிர்க்கும் வகையில் ஜனவரி மாதம் முதல் மார்ச் மாதம் வரை இந்த ரயிலின் பயணிகள் வசதிக்காக தற்காலிகமாக கூடுதல் பெட்டிகள் இணைப்பதாக தெற்கு ரயில்வே அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

# இந்தியாவின் முதல் எலிவேட்டர் & எஸ்கலேட்டர் சிம்போசியம்: ஒரே மாதிரி பாதுகாப்பு குறியீடுகள் அவசியம் என நிபுணர்கள் வலியுறுத்தல்

சென்னை, பிப். 16–

இந்தியாவின் முதல் எலிவேட்டர் & எஸ்கலேட்டர் சிம்போசியம் & வினாடி–வினா 2026 நிகழ்வு




சென்னையில் வெற்றிகரமாக நிறைவடைந்தது. ISEE ஏற்பாடு செய்த இந்த இருநாள் மாநாட்டில், நாடு முழுவதும் ஒரே மாதிரியான குறியீடுகள் (Codes), பாதுகாப்பு தரநிலைகள் மற்றும் ஒழுங்குமுறை இணக்கம் அமல்படுத்தப்பட வேண்டிய அவசியத்தை நிபுணர்கள் வலியுறுத்தினர். தமிழ்நாடு அரசின் தலைமை மின்சார ஆய்வாளர் திரு வி. ராமகிருஷ்ணன் நிகழ்வை தொடங்கி வைத்து, மாநிலங்களிலுள்ள Lift Acts சட்டங்களை கடுமையாக பின்பற்றுவது பொதுமக்கள் பாதுகாப்புக்கு முக்கியம் எனக் குறிப்பிட்டார்.

நிகழ்வில் திரு ஆர். பாலகிருஷ்ணன் (L&T Con–struction), திரு சுராஜ் தோடிமரத் (Wittur Group), மற்றும் திரு ரவி சங்கர் தாண்டவன் (REVROY Pvt Ltd) உள்ளிட்ட துறை தலைவர்கள் பங்கேற்றனர். சிம்போசியத்தின் ஏற்பாட்டாளரும் TAK Con–sulting நிறுவனத்தின் முதன்மை ஆலோசகருமான திரு TAK மேத்யூஸ், “தமிழ்நாட்டில் அதிக எலிவேட்டர் உற்பத்தி நிறுவனங்கள் செயல்படுவதால் சென்னையை முதல் நகரமாகத் தேர்வு செய்தோம். தொழில்நுட்ப புதுமைகள், பாதுகாப்பு மற்றும் சிறந்த நடைமுறைகள் குறித்து ஒருங்கிணைந்த அறிவுப் பகிர்வை உருவாக்குவதே எங்கள் நோக்கம்,” என்று தெரிவித்தார்.

சிம்போசியத்துடன் இணைந்து நடைபெற்ற ISEE Elevator Industry Quiz 2026 போட்டியில் “மஹாகுரு” பட்டத்தை Schindler India நிறுவனத்தைச் சேர்ந்த திரு அக்ஷய் மஹாடிக் மற்றும் திரு வைபவ் பராவ்கர் பெற்றனர். முதல் மற்றும் இரண்டாம் இடங்களை Fujitec India Pvt. Ltd. பிரதிநிதிகள் கைப்பற்றினர். மேலும் John–son Lifts, KONE, Mitsubishi Electric, Otis Elevator Com–pany உள்ளிட்ட முன்னணி நிறுவன நிபுணர்கள் கலந்து கொண்டு, துறையின் தரம், பாதுகாப்பு மற்றும் எதிர்காலத் தயார்நிலையை மேம்படுத்துவதற்கான கருத்துகளை பகிர்ந்தனர்.

# அதிமுக கூட்டணியில் இணைகிறதா தேமுதிக? - வேலுமணி-பிரேமலதா சந்திப்பு!

கோவை, பிப். 16–

கோவை ஈஷா யோகா மையத்தில் நடந்த சிவராத்திரி விழாவில் மத்திய மந்திரி ராஜ்நாத் சிங், மத்திய இணை மந்திரி எல்.முருகன், அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் பங்கேற்றனர். முக்கியமாக இந்த விழாவில், தே.மு.தி.க பொது ச்செயலாளர் பிரேமலதாவும் கலந்து கொண்டார். மேலும், முன்னாள் அமைச்சர் எஸ்.பி வேலுமணியும், தே.மு.தி.க பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்தும் முன் வரிசையில் அருகருகே அமர்ந்து இருந்தனர். முன்வரிசையில் இருந்த முக்கிய பிரமுகர்களுக்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. அப்போது எஸ்.பி.வேலுமணி, பிரேமலதாவை ஈஷா யோகா மையத்தின் நிறுவனர் ஜக்கி வாசுதேவிடம் அறிமுகம் செய்து வைத்தார். இருவரும் அருகருகே அமர்ந்து சிவராத்திரி விழா வை பார்த்தனர். அவ்வப்போது இருவரும் பேசிக் கொண்ட



னர். அந்த சமயம் கூட்டணி தொடர்பாகவும் அவர்கள் கருத்துக்களை பரிமாறி கொண்டதாகவும் கூறப்படுகிறது. இந்த சந்திப்பானது அ.தி.மு.க. பா.ஜ.க. தேமு.தி.க. கூட்டணிக்கு தொடக்கப் புள்ளியாக அமைந்துள்ளது என்று கூறப்படுகிறது. இதனால் தேசிய ஜனநாயக கூட்டணியில் தே.மு.தி.க இடம் பெறுமா என்கிற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

இன்றும் பிரேமலதா விஜயகாந்த் கோவையில் தான் தங்கி உள்ளார். அவருடன் இன்று கூட்டணி பேச்சுவார்த்தை நடைபெறலாம் என தெரிகிறது.

மேலும் கோவையில் தங்கி இருக்கும் பிரேமலதா விஜயகாந்த்தை கோவை மற்றும் ஈரோடு, திருப்பூர் மாவட்ட தே.மு.தி.க மாவட்ட செயலாளர்கள் மற்றும் கட்சியினரை சந்தித்து பேச உள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளது. மகா சிவராத்திரி விழாவில் ஆண்டுதோறும் எஸ்.பி.வேலுமணி பங்கேற்பார்.

நேற்று பிரேமலதா விஜயகாந்த் குடும்பத்தினருடன் சிவராத்திரி விழாவில் பங்கேற்றார். இந்த சந்திப்பு இயல்பாக நடந்தது. இதற்கும் அரசியலுக்கும் தொடர்பு இல்லை. தேர்தல் கூட்டணி குறித்து ஏற்கனவே பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்தபடி தொண்டர்கள் மக்கள் விரும்பும் கூட்டணியை நிச்சயம் அமைப்பார்.

# நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



## மாத்திரை + காஃபி..!! இனி தெரியாமல் கூட இந்த தவறை பண்ணாதீங்க..!!



காபி என்பது பலருக்கும் புத்துணர்ச்சி தரும் பானமாக இருக்கலாம். ஆனால், நீங்கள் சில குறிப்பிட்ட நோய்களுக்காக மருந்து உட்கொள்பவர் என்றால், அதே காபி உங்கள் உயிருக்கே ஆபத்தாக முடியலாம் என்கிறார்கள் மருத்துவ வல்லுநர்கள். காபியில் உள்ள 'காஃபின்' (Caffeine) சில மருந்துகளுடன் வேதியியல் ரீதியாக வினைபுரிந்து, மருந்தின் வீரியத்தை குறைப்பதோடு மட்டுமல்லாமல், உடலில் தேவையற்ற பக்கவிளைவுகளையும் ஏற்படுத்துகிறது.

**இரத்த அழுத்தம் மற்றும் இதய நோய் மருந்துகள் :**

இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தும் மருந்துகள் இதயத் துடிப்பைச் சீராக்கி, இரத்த நாளங்களின் அழுத்தத்தைக் குறைக்கப் பயன்படுகின்றன. ஆனால், காபியில் உள்ள காஃபின் இதற்கு நேர்மாறாகச் செயல்பட்டு, தற்காலிகமாக இரத்த அழுத்தத்தை அதிகரிக்கச் செய்யும். இதனால் நீங்கள் உட்கொள்ளும் மருந்தின் பலன் இல்லாமல் போய்விடும். எனவே, பிபி (BP) மாத்திரை போடுபவர்கள் காபியைத் தவிர்த்து, மிகக் குறைந்த அளவில் தேநீர் அருந்துவதே பாதுகாப்பானது.

**வலி நிவாரணிகள் :**

பாராசிட்டமால் மற்றும் ஆஸ்பிரின் போன்ற வலி நிவாரணிகளில் ஏற்கனவே சிறிதளவு காஃபின் கலக்கப்பட்டிருக்கும். இதனுடன் கூடுதலாக நீங்கள் காபி குடித்தால், மருந்துகள் ரத்தத்தில் மிக வேகமாக உறிஞ்சப்படும். இது வயிற்றில் கடுமையான எரிச்சல், புண் அல்லது உட்புற இரத்தப்போக்கை ஏற்படுத்தக்கூடும். மேலும், இது இதயத்திற்கு தேவையற்ற அழுத்தத்தை தந்து படபடப்பை உண்டாக்கும்.

**சளி மற்றும் காய்ச்சல் மருந்துகள் :**

சளி மருந்துகளில் பொதுவாக 'சூடோஎஃபெட்ரின்' (Pseudoephedrine) என்ற தூண்டுதல் பொருள் இருக்கும். காஃபினும் ஒரு வகை தூண்டுதல் என்பதால், இவை இரண்டும் சேரும்போது நரம்பு மண்டலத்தை அதீதமாகப் பாதிக்கும். இதனால் தலைவலி, கை நடுக்கம், தூக்கமின்மை மற்றும் கடுமையான அமைதியின்மை போன்ற பிரச்சனைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. குறிப்பாக இதயப் பிரச்சனை உள்ளவர்களுக்கு இது மிக ஆபத்தானது.

**மன அழுத்த எதிர்ப்பு மருந்துகள் :**

மனச்சோர்வு மற்றும் பதட்டத்திற்கு சிகிச்சை பெறுபவர்கள் காபியை தவிர்க்க வேண்டும். காபியில் உள்ள 'டானின்கள்' (Tannins) இந்த மருந்துகளுடன் வேதிவினை புரிந்து, உடல் அவற்றை உறிஞ்சுவதைத் தடுக்கின்றன. சில ஆன்டிசைகோடிக் மருந்துகளைக் காபியுடன் சேர்த்து எடுக்கும்போது, அவற்றின் அளவு இரத்தத்தில் 97% வரை அதிகரித்து, தலைச்சுற்றல் மற்றும் மனக்குழப்பத்தை ஏற்படுத்தும் என ஆய்வுகள் எச்சரிக்கின்றன.

**தைராய்டு மருந்துகள் :**

தைராய்டு பிரச்சனைக்கு 'லெவோதைராக்ஸைன்' (Levothyroxine) மாத்திரை எடுப்பவர்கள் காபி குடிப்பதில் மிகுந்த எச்சரிக்கை தேவை. மாத்திரை எடுப்பதற்கு முன்பு காபி குடித்தால், உடல் அந்த மருந்தை உறிஞ்சும் திறன் 50% வரை குறைந்துவிடும். காபி செரிமானத்தை வேகப்படுத்துவதால், மருந்து முழுமையாக வேலை செய்யும் முன்பே சிதைந்துவிட வாய்ப்புள்ளது.

**குறிப்பு :** மருந்து உண்பவர்கள் எப்போதும் காபி குடித்த குறைந்த பட்சம் ஒரு மணி நேரம் கழித்தே மருந்துகளை உட்கொள்ள வேண்டும் அல்லது மருத்துவரின் ஆலோசனையைப் பெற வேண்டும்.



பழனி மாரியம்மன் கோவில் மாசி திருவிழாவை முன்னிட்டு 7வது வார்டு மகளிர் சார்பாக பால்குடம் மற்றும் தீர்த்த குடம் எடுத்து வந்தனர் இதில் 7வது வார்டு மூத்த நகர்மன்ற உறுப்பினர் கே.சுரேஷ் கலந்து கொண்டார். விழா ஏற்பாடுகளை கீர்த்தனா பார்த்திபன், மல்லிகா, வாணி கணேசன், முத்து கோவிந்தன், கோகிலா கணேசன், மகேஸ்வரி, செல்வராணி தண்டபாணி, பாலாமணி அண்ணாதுரை ஆகியோர் செய்தனர். மகளிர் கலந்து கொண்டனர்.



மதுரை மேலவாசல் CSI துவக்கப்பள்ளியில் புரட்சிப் பாவலர் மன்ற தலைவர் பி.வரதராசன் தலைமையில் நடைபெற்றது விழாவில் பண்ணாட்டு தமிழுறவு மன்ற தலைவர் தமிழ்பணி ஆசிரியர் தமிழ்மாமணி வா.மு.சே.திருவள்ளுவர் அவர்களுக்கு நிலா இலக்கிய மன்ற தலைவர் கவிக்குயில் கணேசன் சிறப்பு செய்தார் இவ்விழாவில் இளையநேதாஜி வே.சுவாமிநாதன், கவிஞர்கள் அருட்கலைமாமணி ஞான ஆனந்தராஜ் தன்சிங்மனோகரன், குறளடியான், சாந்தி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# தமிழக மக்களின் வங்கிக் கணக்கில் ரூ.12,000..?

சென்னை, பிப். 16–

தமிழ்நாட்டில் 2026 சட்டமன்ற தேர்தலுக்கான அரசியல் யுத்தம் இப்போதே தொடங்கிவிட்டது. ஆளுங்கட்சியான திமுக, மகளிர் உரிமைத் தொகை மற்றும் கோடைக்கால சிறப்பு நிதி என ஒரே தவணையாக ரூ.5,000 வழங்கி மக்கள் மத்தியில் நற்பெயரைப் பெற்றுள்ள நிலையில், அதற்குப் போட்டியாக மத்திய பாஜக அரசு ஒரு பிரம்மாண்டமான நிதித் திட்டத்தை தயார் செய்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. தமிழக வாக்காளர்களின் கவனத்தைத் தன் பக்கம் ஈர்க்க, பயனாளிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக ரூ.12,000 வரை வரவு வைக்க டெல்லி மேலிடம் அதிரடித் திட்டம் வகுத்து வருகிறது.

சமீபத்தில் திருச்சிக்கு வருகை தந்த மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா, தமிழக பாஜக நிர்வாகிகளுடன் நடத்திய ரகசிய ஆலோசனைக் கூட்டத்தில் இந்த விவகாரம் முக்கிய இடம்பிடித்ததாக தெரிகிறது. தமிழக அரசின் ரூ.5,000 திட்டம் பெண்களிடையே ஏற்படுத்தியுள்ள தாக்கத்தை முறியடிக்க வேண்டுமானால், அதைவிடப் பெரிய அளவிலான ஒரு நிதி உதவியை மக்களுக்கு நேரடியாக கொண்டு சேர்க்க வேண்டும் என மாநில நிர்வாகிகள் தரப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இதைக் கவனத்தில் கொண்ட அமித்ஷா, மத்திய அரசின் பல்வேறு நலத்திட்டங்களை ஒருங்கிணைத்து ஒரு 'மெகா' தொகுப்பை வழங்க ஒப்புதல் அளித்துள்ளதாக கூறப்படுகிறது. மத்திய அரசின் கேஸ் மானியம், உர மானியம் மற்றும் பிரதமரின் கிசான் சம்மன் நிதி (PM–Kisan) போன்ற பல்வேறு திட்டங்களின் கீழ் வழங்கப்படும் நிலுவைத் தொகைகளை ஒருங்கிணைத்து, அவற்றை மொத்தமாக ரூ.12,000–ஆக பயனாளிகளுக்கு வழங்க ஆலோசிக்கப்பட்டு வருகிறது. நேரடிப் பலன் பரிமாற்றம் (DBT) மூலம் இந்தத் தொகை மக்களின் வங்கிக் கணக்கிற்குச் செல்லும்போது, அது ஆளுங்கட்சியின் திட்டத்தை விட அதிக தாக்கத்தை ஏற்படுத்தும் என பாஜக நம்புகிறது. இது வெறும் தேர்தல் கால அறிவிப்பாக மட்டுமன்றி, தமிழகத்தில் பாஜகவின் வாக்கு வங்கியை உறுதிப்படுத்தும் ஒரு 'மாஸ்டர் ஸ்ட்ரோக்' ஆக பார்க்கப்படுகிறது.

தேர்தல் தேதி அறிவிக்கப்படுவதற்கு முன்பாக, பிரதமர் நரேந்திர மோடி தமிழகம் வரும்போது இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பை அதிகாரப்பூர்வமாக வெளியிட வாய்ப்புள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. தமிழகத்தில் வலுவான கூட்டணியை அமைப்பதற்கும், அதிமுக மற்றும் திமுக ஆகிய திராவிட கட்சிகளுக்கு பலமான சவாலை அளிப்பதற்கும் இத்தகைய நிதி சார்ந்த அறிவிப்புகள் பாஜகவுக்கு கைகொடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# எந்த கட்சிக்கு வேண்டுமானாலும் வாக்களியுங்கள் - கமல்ஹாசன் பரபரப்பு பேட்டி!




சென்னை, பிப். 16–

சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள மகளிர் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல்ஹாசன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். நிகழ்ச்சிக்கு பின்னர், செய்தியாளர்களைச் சந்தித்த அவர் கூறியதாவது:–

நான் கல்லூரியில் கலாசார நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக வந்துள்ளேன். மாணவர்களுக்கு இருக்கும் சந்தேகம் எனக்கும் நிறைய உள்ளது. நான் நிரந்தர மாணவனாகவே என்னை நியமித்து கொண்டு விட்டேன். அதனால் இங்கு வருவதற்கு எனக்கு நிறைய உரிமை இருப்பதாகவே நான் கருதுகிறேன். இது கலாசார நிகழ்ச்சி. தேர்தல் நிகழ்ச்சி அல்ல. ஆனால் அரசியல் எல்லா இடங்களிலும் புகுந்து தாக்கி கொண்டிருக்கும் இந்த நேரத்தில், அதைப்பற்றி பேசவில்லை என்றாலும், அந்த குறியீட்டையாவது அவர்களுக்கு காட்ட வேண்டும். புரிய வைக்க வேண்டும் என்பதற்காக நான் இங்கு வந்திருக்கிறேன். தனியாக கட்சியை தொடங்கி ஒரு சதவீத வாக்கையாவது வாங்க முடியுமா என்று விஜய் சவால் விடுத்தது தொடர்பான கேள்விக்கான பதிலை வேறு இடத்தில் வைத்து சொல்கிறேன். கல்லூரி மாணவர்களுக்கு அரசியல் புரிதல் இருக்கிறதா? இல்லையா? என்று கேள்வியை மட்டும் கேட்டுக்கொண்டு இருக்காமல், இல்லையென்று நினைத்து கொண்டு சொல்வது நல்லது. ஓட்டுரிமை குறித்து அவர்களிடம் நியாபப்படுத்த வேண்டும். அந்த உரிமை அவர்களுக்கு வந்து விட்டது. எந்த கட்சிக்கு வேண்டுமானாலும் வாக்களியுங்கள். ஆனால், கண்டிப்பாக வாக்களிக்க வேண்டும். அதை சொல்வது என்னுடைய கடமை. அதை எந்த அரசாலும் தடுக்க முடியாது என்கிற நம்பிக்கை எனக்கு இருப்பதால் தைரியமாக நான் இங்கு வந்திருக்கிறேன். விஜய்யை ஒரு நடிகையுடன் ஒப்பிட்டு பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் விமர்சனம் செய்திருப்பது அவர்களின் அரசியல். அது என்னுடைய அரசியல் இல்லை. இவ்வாறு அவர் கூறினார்.

# த.வெ.க. -வுடன் கூட்டணி; காங்கிரசார் வலியுறுத்தல்!



புதுடெல்லி, பிப். 16–

'த.வெ.க., வுடன் கூட்டணி பேச்சை துவக்க வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றும்படி, மாவட்டத் தலைவர்களுக்கு அழுத்தம் கொடுங்கள்' என, தமிழக காங்கிரஸ் மாநில நிர்வாகிகள் சிலர், கட்சியினருக்கு சுற்றறிக்கை அனுப்பி உள்ளனர்

தமிழக காங்கிரஸ் மாநில நிர்வாகிகள் பொன். கிருஷ்ணமூர்த்தி, கே. விஜயன், எம். ஜோதி, என். முருகானந்தம், கே. தணிகாசலம், எஸ். வி. ரமணி, இல. பாஸ்கரன், நசீர் ராஜா ஆகியோர், சென்னையில் நேற்று முன்தினம் ரகசிய கூட்டம் நடத்தினர். இதில் எடுத்த முடிவை, கட்சியினருக்கு சுற்றறிக்கையாக அனுப்பி உள்ளனர் அதில், 'காங்கிரஸ் தொண்டர்கள் தங்கள் மாவட்டத் தலைவர்களை தொடர்பு கொண்டு, த.வெ.க., வுடன் உடனே கூட்டணி பேச்சை துவக்க, கட்சித் தலைமையை வலியுறுத்தி, தீர்மானம் நிறைவேற்றுங்கள். தீர்மானத்தின் நகலை, காங்கிரஸ் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வையுங்கள் என அழுத்தம் கொடுக்க வேண்டும்' என்று தெரிவித்துள்ளனர்.

# அதிமுக முன்னாள் எம்எல்ஏ மனோகர் தவெகவில் இணைந்தார்!



சென்னை, பிப். 16–

தமிழக சட்டசபை தேர்தல் ஏப்ரல் மாதம் நடைபெற வாய்ப்பு உள்ளது. தேர்தலுக்கு இன்னும் ஓரிரு மாதங்களே உள்ள நிலையில் அரசியல் கட்சிகள் தேர்தல் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி வருகின்றன. பிரசாரம், பொதுக்கூட்டம், கூட்டணி, தொகுதி பங்கீடு, கட்சி நிர்வாகிகளுடன் ஆலோசனை என பல்வேறு நடவடிக்கைகளை அரசியல் கட்சிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

தேர்தலையொட்டி பல்வேறு அரசியல் கட்சிகளின் பிரபலங்கள் கட்சி மாறி வருகின்றனர். அந்த வகையில் நடிகர் விஜய்யின் தவெகவில் பல்வேறு கட்சிகளையும் சேர்ந்தவர்கள் இணைந்து வருகின்றனர்.

இந்த நிலையில் அதிமுக முன்னாள் எம்எல்ஏ மனோகர் தவெகவில் இணைந்துள்ளார். சென்னையில் நேற்று தவெக தலைவர் விஜய்யை சந்தித்து, மனோகர் தன்னை தவெகவில் இணைத்து கொண்டார். இவர் கடந்த 2016–ம் ஆண்டு தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூர் (தனி) சட்டசபை தொகுதியில் அதிமுக சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மகா சிவராத்திரியை முன்னிட்டு மதுரை தெப்பக்குளம் முக்தீஸ்வரர் கோவிலில் கோலாகலம்!

## ஆயிரக்கணக்கான பக்தர்கள் விடிய விடிய சாமி தரிசனம்!!

மதுரை, பிப். 16–

சிவராத்திரியை முன்னிட்டு மதுரை மாவட்டத்தில் உள்ள அனைத்து சிவாலயங்களிலும் விடிய விடிய சிறப்பு வழிபாடு நடைபெற்றுவருகிறது. இந்த நிலையில் மதுரை தெப்பக்குளம் அருகே உள்ள முக்தீஸ்வரர் திருக்கோவிலில் மகா சிவராத்திரி பெருவிழா கோலாகலமாக தொடங்கி நடைபெற்று வருகிறது மாலை 6:00 மணி முதல் அதிகாலை 6:00 மணி வரையும் விடிய விடிய சிறப்பு வழிபாடு நடைபெற்று வருகிறது. மாலை 6 மணிக்கு மங்கள வாத்தியத்துடன் தொடங்கிய சிவராத்திரி பெருவிழா துவங்கியது. முக்தீஸ்வரர் மரகதவல்லி தாயார் திருக்கோயிலில் விடிய விடிய நான்கு கால பூஜைகள் நடத்தப்பட்டது. இதில் மதுரை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளை சேர்ந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் விடிய விடிய காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர். நான்கு காலபூஜைகளின் போது விரமிருந்த பக்தர்கள் சிவாயநமஹ என்ற நாமத்தை போற்றியபடி கண்விழித்து சிவபுராணமும், பாராயணமும், தேவாரம், திருவாசகம் பாடியபடி வணங்கினர்.



நான்கு கால பூஜையின் போது சுந்தரேசுவரருக்கு பால், தயிர்,நெய், பஞ்சாமிர்தம், வில்வ இலைகளால் அபிஷேக ஆராதனைகள் நடத்தப்பட்டது.. இதனையடுத்து பக்தர்களுக்கு சந்தனம் வில்வ இலைகள் பிரசாதமாக வழங்கப்பட்டது அதே போன்று கோவிலுக்கு வந்த பக்தர்களுக்கு அம்மா சேரிடபிள் டிரஸ்ட் சார்பில் முன்னாள் அமைச்சர் ஆர்பி உதயகுமார் முன்னிலையில் அம்மா சேரிட்டபிள் டிரஸ்ட் செயலாளர் U.பிரியதர்ஷினி–முரளி, அம்மா சாரிட்டபிள் டிரஸ்ட் தலைவர் தாமைரைசெல்வி உதயகுமார், டிரஸ்ட் இயக்குநர்கள் U.தனலெட்சுமி, வர்சிகா, மோனிகா, திரைப்பட நடிகர் ஆர்.பி.யோகீஸ்வரன் உள்ளிட்டோர் அன்னதானம் வழங்கினார்கள் இந்நிகழ்வில் அட்சய பாத்திரம் ட்ரஸ்ட் நிறுவனர் திரு.நெல்லை பாலு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.




இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்

127, T.P.K.ரோடு, மதுரை.

Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ்

பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை

Ph: 98659 88881


# வேலை வாய்ப்பு

## இந்திய கப்பல் படையில் 260 காலியிடங்கள்

Organization Name: Indian Navy
Job Category: Central Govt Jobs
Employment Type: Regular Basis
Total No of Vacancies: 260 SSC (various entries) Jan 27 Course (Unmarried men and Unmarried women) Posts
Place of Posting: All Over India
Starting Date: 24.01.2026
Last Date: 24.02.2026
Apply Mode: Online
Official Website: https://www.joinindiannavy.gov.in/



# கீழக்கரையில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா!

இராமநாதபுரம், பிப். 16–

இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது.

இவ்விழாவில் இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினரும் கழக மாவட்ட செயலாளருமான காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் தலைமை தாங்கி பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

நிகழ்வில் நகர் கழக செயலாளர் பசீர் அஹமத், துணைச் செயலாளர் ஜெய்னுதீன், நகர்மன்ற தலைவர் செஹானாஸ் ஆபிதா, துணைத் தலைவர் ஹமீது சுல்தான், நகர்மன்ற உறுப்பினர்கள் சப்ராஸ் நவாஸ், ஷேக் உசைன், சித்திக் மீரான் அலி, நசுருதீன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். மேலும் வட்டக் கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் மற்றும் பொதுமக்கள் பெருமளவில் பங்கேற்று விழாவை சிறப்பித்தனர்.

## சினிமா துளிகள்..!

# காதலரை கரம் பிடித்த நடிகை ரோஷினி ஹரிப்ரியன்..



ரோஷினி ஹரிப்பிரியன் தற்போது தமிழ் சினிமாவில் நடித்து வருகிறார். முன்னதாக விஜய் டிவியில் ஒளிபரப்பாகி வந்த பாரதி கண்ணம்மா என்கிற தொலைக்காட்சித் தொடரில் முதன்மை நாயகியாக நடித்து பிரபலமானார். அதன்பிறகு கடந்த 2022 ஆம் ஆண்டில் 'குக் வித் கோமாளி சீசன் 3' நிகழ்ச்சியில் போட்டியாளராக பங்கேற்றார். இறுதிப் போட்டி நடைபெறுவதற்கு சற்று முன்பு அந்த நிகழ்ச்சியில் இருந்து வெளியேற்றினார்.

2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் தொடர்ச்சியாக இரண்டு ஆண்டுகள், ரோஷினி தி டைம்ஸ் ஆஃப் இந்தியாவின் இந்திய தொலைக்காட்சியில் மிகவும் விரும்பத்தக்க 20 பெண்கள் பட்டியலில் பட்டியலிடப்பட்டார்.

இதனிடையே கடந்த 2024 ஆம் ஆண்டு விமர்சன ரீதியாக பாராட்டப்பட்ட கருடன் திரைப்படத்தில் நடித்து இவர் பலரிம கவனத்தை ஈர்த்தார். அதன் பிறகு காளிவெங்கட் நடித்த 'மெட்ராஸ் மேட்டினி என்ற படத்தில் முக்கியமான ரோலில் நடித்து இருந்தார். அதைத் தொடர்ந்து விஜய்சேதுபதி, நித்யாமேனன் நடித்த தலைவன் தலைவி படத்தில் விஜய்சேதுபதியின் தங்கை நடித்தார்.

இந்நிலையில் தற்போது பிப் 15ல்,நடிகை ரோஷினி ஹரிப்ரியன் சுந்தரமூர்த்தி என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். எந்தவிதமான முன்னறிவிப்பும் இன்றி, நெருங்கிய நண்பர்கள் மற்றும் உறவினர்கள் முன்னிலையில் மிகவும் எளிமையாக இந்தத் திருமணம் நடந்து முடிந்துள்ளது.




# காசா மறுசீரமைப்புக்கு ரூ.45 ஆயிரம் கோடி வழங்க அமைதி வாரியம் உறுதி: அதிபர் டிரம்ப்!



வாஷிங்டன்,பிப். 16–

காசாவை மறுசீரமைக்கவும், மனிதாபிமான உதவிகளை மேற்கொள்ளவும் ரூ.45 ஆயிரம் கோடி வழங்க காசா அமைதி வாரியம் உறுதியளித்துள்ளதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவித்துள்ளார். இது தொடர்பாக தன்னுடைய எக்ஸ் தளப்பக்கத்தில் அவர் கூறியிருப்பதாவது; அமைதி வாரியம்: கடந்த அக்டோபர் மாதம் இஸ்ரேல் – காசா மோதலுக்கு நிரந்தர முற்றுப்புள்ளி வைப்பதற்கான திட்டத்தை நான் வெளியிட்டேன். எங்களது தொலைநோக்குப் பார்வையை ஐநா பாதுகாப்பு சபையால் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கடந்த மாதம், சுவிட்சர்லாந்தின் டாவோஸில் நடந்த நிகழ்ச்சியில் ஒட்டுமொத்த உலக அமைதிக்காகவும், ஒரு துணிச்சலான திட்டத்தை முன்வைத்தோம். வரும் பிப்ரவரி 19ம் தேதி இந்த அமைதி வாரியத்தில் மேலும் உறுப்பினர்கள் இணைய உள்ளனர். அங்கு, அமைதி வாரியத்தின் உறுப்பு நாடுகள், காசா மறுசீரமைப்பு மற்றும் மனிதாபிமான உதவிகளுக்காக 45 ஆயிரம் கோடிக்கும் அதிகமான நிதியை வழங்க முன்வந்துள்ளதை அறிவிப்போம். மேலும், காசா மக்களின் பாதுகாப்பு மற்றும் அமைதியைப் பேணுவதற்காக, ஆயிரக்கணக்கான வீரர்கள் கொண்ட சர்வதேச படை மற்றும் உள்ளூர் போலீசாருடன் பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளனர், இவ்வாறு அவர் கூறினார்.

# சபரிமலை விவகாரம்: வழக்குகளை விசாரிக்க 9 புதிய அமர்வுகள் அமைக்கப்படும்- உச்சநீதிமன்றம் அறிவிப்பு!





சபரிமலை, பிப். 16–

சபரிமலை ஐயப்பன் கோவிலில் அனைத்து வயது பெண்களையும் தரிசனத்திற்கு அனுமதிக்க வேண்டும் என்று கடந்த 2018–ம் ஆண்டு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. இதை எதிர்த்து பக்தர்களும், அரசியல் கட்சியினரும் மாநிலம் முழுவதும் போராட்டம் நடத்தினர்.

இதற்கிடையில் சுப்ரீம் கோர்ட்டு உத்தரவை மறு ஆய்வு செய்ய வலியுறுத்தி மறு ஆய்வு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த மனுக்கள் உச்சநீதிமன்றத்தில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள ப்பட்டது.

இந்நிலையில், அனைத்து வயது பெண்களும் சபரிமலை செல்ல அனுமதிக்கும் தீர்ப்புக்கு எதிரான மனு வழக்கில் 9 புதிய அமர்வுகள் அமைக்கப்படும் என உச்சநீதிமன்றம் அறிவித்துள்ளது.

சீராய்வு மனுக்கள் மீதான வழக்குகளை விசாரிக்க புதிய 9 நீதிபதிகள் அமர்வு அமைக்கப்படும் என அறிவித்துள்ளது. மனுதாரர்கள் மார்ச் 14ம் தேதிக்குள் எழுத்துப்பூர்வமான வாதங்களை தாக்கல் செய்ய உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சபரிமலை மட்டுமில்லாமல் பிற மதங்கள் தொடர்பான வழக்குகளையும் சேர்த்து விசாரிக்க உச்சநீதிமன்றம் முடிவு செய்துள்ளது. வழக்குகளை ஒருங்கிணைத்து நீதிமன்ற த்திற்கு உதவும் வழக்கறி ஞராக மூத்த வழக்கறிஞர் பரமேஸ்வரை நியமித்து தலைமை நீதிபதி உத்தரவிட்டுள்ளார். ஏப்ரல் 21, 22ம் தேதிகளில் சபரிமலை வழக்கின் இறுதி வாதம் நடைபெறும் எனவும் உச்சநீதிமன்றம் அறிவித்துள்ளது.

# தவெக பக்கம் திரும்பும் சிறுபான்மையினர், இளைஞர்கள் வாக்கு: வெற்றி வாய்ப்பை பாதிக்கும் என்பதால் திமுக புது வியூகம்!



சென்னை, பிப். 16–

தமிழகத்தில் ஆளுங்கட்சியான திமுக, வரும் சட்டசபை தேர்தலிலும் வெற்றி பெற்று ஆட்சியை தக்க வைத்துக்கொள்ள வேண்டும் என்று காய்களை நகர்த்தி வருகிறது. இந்த தேர்தலில் புது வரவான நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகமும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதால், ஒவ்வொரு முன்னெடுப்பையும் கண்ணும் கருத்துமாக திமுக எடுத்துவைத்து வருகிறது.

அதனாலதான், முன் எப்போதும் இல்லாத வகையில், திமுகவுக்கு இந்த முறை பாப்புலஸ் எம்பவர்மென்ட் நெட்வொர்க் (பென்), ரிஷி ராஜ்சிங்கின் ஐபேக், ராபின் சர்மாவின் சோடைம் கன்சல்டிங் ஆகிய 3 நிறுவனங்கள் தேர்தல் வேலைகளை கவனித்து வருகின்றன.

**திமுக நிர்வாகிகள் அச்சம்**

இதுதவிர, துணை முதல்–அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு சுனில் கனுலோலு தலைமையில் ஒரு குழு தனியாக தேர்தல் பணிகளை செய்து வருகிறதாம். இந்த 4 நிறுவனங்கள் தான் திமுக தலைமைக்கு தேர்தல் வியூகங்களை வகுத்து கொடுப்பதுடன், வேட்பாளர்கள் தேர்வையும் கவனித்து வருகிறதாம். இது திமுக நிர்வாகிகள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதாக கூறப்படுகிறது. இந்த நிலையில், சமீபத்தில் டெல்லியில் பணியாற்றும் தமிழக கேடரை சேர்ந்த மூத்த ஐ.பி.எஸ். அதிகாரி ஒருவர், உளவுத்துறை தகவல்கள் மற்றும் தேர்தல் கள நிலவரம் தொடர்பாக, தான் மேற்கொண்ட ஆய்வுடன் திமுக தலைமையை சந்தித்து பேசியதாக கூறப்படுகிறது.

**விரிவான அறிக்கை**

அப்போது, தமிழகத்தில் உள்ள 234 சட்டசபை தொகுதிகளிலும் திமுகவுக்கான வெற்றி வாய்ப்பு எப்படி இருக்கிறது? என்பது குறித்து விரிவான அறிக்கையை அந்த ஐ.பி.எஸ். அதிகாரி கட்சி தலைமையிடம் வழங்கியதாக தெரிகிறது. அறிக்கையை பார்த்தவுடன் திமுக தலைமை அதிர்ச்சியடைந்ததாம். ஏற்கனவே, “சட்டசபை தேர்தலில் 200 தொகுதிகளுக்கு மேல் திமுக கூட்டணி வெற்றிபெறும்” என்று முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறிவருகிறார். ஆனால், இந்த ஐ.பி.எஸ். அதிகாரியின் கணிப்பில், நடிகர் விஜய்யின் அரசியல் வருகையால், திமுகவுக்கு 200 தொகுதிகளில் வெற்றி என்பது எளிதல்ல என்று தெரியவந்துள்ளதாம்.

**சிறுபான்மையினர் வாக்கு யாருக்கு?**

தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய், கிறிஸ்தவர் என்பதால் இந்த முறை சிறுபான்மையினர் வாக்கு அவருக்கு கிடைக்க சாதகமான சூழல் நிலவுகிறதாம். இப்போதே, பல கிறிஸ்தவ தேவாலயங்களில் அவருக்கு வாக்களிக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்படுகிறதாம்.

மேலும், இளைஞர்கள் மற்றும் நடுநிலை வாக்காளர்களின் கணிசமான வாக்குகள் தவெகவுக்கு கிடைக்கும் நிலையும் உள்ளதாம். பொதுவாக, சிறுபான்மையினர் வாக்கு சிந்தாமல் சிதறாமல் திமுகவுக்கு வழக்கமாக கிடைக்கும். அதுதான் பல தொகுதிகளில் திமுகவின் வெற்றியை தீர்மானிக்கும் சக்தியாக இருக்கும்.

**கொங்கு மண்டலம் திமுகவுக்கு சாதகம்**

ஆனால், இந்த முறை சிறுபான்மையினர் வாக்கு தமிழக வெற்றிக் கழகத்திற்கும் கிடைக்கும் என்பதால், அது திமுகவின் வெற்றியை பாதிக்கும் என்று கூறப்படுகிறது. அதே நேரத்தில், திமுகவுக்கு கிடைத்த ஒரே ஆறுதல், இந்த முறை கொங்கு மண்டலத்தில் நிலவும் அரசியல் சூழ்நிலை திமுகவுக்கு சாதகமாக இருக்கிறதாம்.


எப்போதும், அதிமுகவின் கோட்டையாக விளங்கும் கொங்கு மண்டலத்தில், இந்த முறை அக்கட்சியின் செல்வாக்கு சரிந்துள்ளதாம். அதிமுக கூட்டணிக்கு வரும் தேர்தலில் 5 இடங்கள் மட்டுமே கிடைக்கும் என்று புள்ளிவிவரங்கள் கூறுகிறதாம்.

**மீண்டும் வெற்றிக் கனி கிடைக்குமா?**

இது திமுகவுக்கு சாதகம் என்றாலும், ஒட்டுமொத்த முடிவு எப்படி இருக்கப்போகிறது? என்பது திமுகவுக்கு இன்னும் புரியாத புதிராகவே உள்ளதாம். அதனால்தான், மகளிர் உரிமைத்தொகை பெறும் 1 கோடியே 31 லட்சம் பெண்களின் வங்கிக் கணக்குகளில் திடீரென ரூ.5 ஆயிரம் பணம் வரவு வைக்கப்பட்டதாம். தற்போதைய நிலையில், மக்களின் மனநிலை என்ன என்பது குறித்து திமுகவிடம் உள்ள 3 வியூக வகுப்பு நிறுவனங்களும் ஆய்வு செய்து வருகின்றனவாம்.


மேலும், தமிழகத்தில் தவெகவுக்கு செல்வாக்குள்ள தொகுதிகள் எவை? என்பது குறித்து கணக்கெடுத்து வருகிறதாம். அங்கு புது வியூகத்துடன் கூடுதல் கவனம் செலுத்த திமுக தலைமை திட்டமிட்டுள்ளதாம். எப்படியும் வரும் தேர்தலில் மீண்டும் வெற்றிக் கனியை பறித்துவிட வேண்டும் என்ற எண்ணத்தில் திமுக தீவிரமாக களப்பணி ஆற்றிவருகிறதாம்.





தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திருச்சிராப்பள்ளி மாவட்டம் இலால்குடி நகராட்சியில் 31.89 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய பேருந்து நிலையத்தை திறந்து வைத்து, பேருந்துகளின் இயக்கத்தை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கவிஞர் சல்மா, அருண்நேரு, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.அ.சௌந்தரபாண்டியன், செ.ஸ்டாலின்குமார், ந.தியாகராஜன், திரு.எம்.பழனியாண்டி, சீ.கதிரவன், மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், நகராட்சி நிர்வாக இயக்குநர் ப.மதுசூதன் ரெட்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன், மாவட்ட வருவாய் அலுவலர் ஆர்.பாலாஜி, நகர் மன்ற தலைவர் துரை மாணிக்கம் உள்பட அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் உடனிருந்தனர்.

# குரூப் - 2 தேர்வு குளறுபடி: நிர்வாக ரீதியான தோல்வி!



சென்னை, பிப். 16–

தமிழக அரசு துறைகளில் உதவி ஆய்வாளர், இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர், நன்னடத்தை அலுவலர் என, பல்வேறு குரூப் – 2, 2ஏ பணிகளில், 828 காலி பணியிடங்கள் உள்ளன. இவற்றை நிரப்புவதற்கான அறிவிப்பு, கடந்த ஆண்டு ஜூலை 15ல் வெளியிடப்பட்டது. முதல்நிலை தேர்வு கடந்த செப்டம்பர் 28ல் நடந்தது. அதன் முடிவுகள், டிசம்பர் 22ல் வெளியாகின. அவற்றில், குரூப் – 2 முதன்மை தேர்வுக்கு 1,126 பேர்; குரூப் – 2ஏ தேர்வுக்கு 9,457 பேர் தகுதி பெற்றனர்.

இவர்களுக்கான முதன்மை தேர்வுகள், தமிழகம் முழுதும் கடந்த 8ம் தேதி நடப்பதாக இருந்தது. காலையில் குரூப் – 2ஏ பொது அறிவு தேர்வும்; மதியம் குரூப் – 2, 2ஏ தமிழ் தகுதித் தேர்வும் நடப்பதாக இருந்தது. ஆனால், சென்னையில் தேர்வு மையம் ஒதுக்கீட்டில் குளறுபடி ஏற்பட்டது. தேர்வர்களுக்கான தேர்வு மைய விபரங்கள், ஹால் டிக்கெட்டில் தவறாக பதிவு செய்யப்பட்டிருந்தன. இதனால், சென்னை அரும்பாக்கத்தில் உள்ள மையத்திற்கு தேர்வு எழுத வந்தவர்கள் அதிர்ச்சி அடைந்தனர். இதனால், டி.என்.பி.எஸ்.சி., நிர்வாகத்தை கண்டித்து சென்னை பூந்தமல்லி நெடுஞ்சாலையில், தேர்வர்கள் மறியல் போராட்டம் நடத்தினர். இதையடுத்து, தொழில்நுட்ப கோளாறால் குளறுபடி ஏற்பட்டதாகக் கூறி, தமிழகம் முழுதும் குரூப் – 2 தேர்வு ரத்து செய்யப்படுவதாக டி.என்.பி.எஸ்.சி., தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர் சண்முகசுந்தரம் அறிவித்தார். அதேநேரத்தில், மாநிலத்தின் மற்ற பகுதிகளில், தேர்வுகள் துவங்கி தேர்வர்கள் எழுதிக் கொண்டிருந்தனர். இருப்பினும், டி.என்.பி.எஸ்.சி., வரலாற்றிலேயே, தேர்வு நடந்து கொண்டிருந்த போதே தேர்வு ரத்து செய்யப்பட்ட வினோதம் அன்று அரங்கேறியது. ஆரம்பகட்ட விசாரணையின் அடிப்படையில், இரண்டு உதவி பிரிவு அலுவலர்கள், இரண்டு பிரிவு அலுவலர்கள், ஒரு சார்பு செயலர் ஆகியோர், ‘சஸ்பெண்ட்’ செய்யப்பட்டுள்ளனர். மேலும், துணை செயலர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

டி.என்.பி.எஸ்.சி., தேர்வு எழுதி, அரசு வேலையில் சேர வேண்டும் என்பது பல ஆயிரம் பட்டதாரிகளின் கனவு. அதற்காக நிறைய பணம் செலவழித்து கோச்சிங் சென்டர்களுக்கு செல்வதுடன், ஆண்டுக்கணக்கில் இரவு பகலாக படித்தும் தயாராகி வருகின்றனர். அப்படிப்பட்ட சூழ்நிலையில், தொழில்நுட்ப கோளாறு காரணமாக திடீரென தேர்வுகள் ரத்து என்பது, பல ஆயிரம் இளைஞர்களுக்கு மன உளைச்சலை ஏற்படுத்தும் செயலாகும்.

கடந்த 2019ல், டி.என்.பி.எஸ்.சி., நடத்திய குரூப் – 4 தேர்வில் முறைகேடுகள் நடந்ததாக குற்றச்சாட்டு எழுந்தது. இதுதொடர்பாக, சி.பி.சி.ஐ.டி., போலீசார் வழக்குப் பதிவு செய்து பலரை கைது செய்தனர். இதன்பின், தேர்வில் முறைகேடுகள் நடக்காமல் தடுக்க, பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாக டி.என்.பி.எஸ்.சி., தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அதுமட்டுமின்றி, கடந்த பல ஆண்டுகளில் தொழில்நுட்பம் எவ்வளவோ மேம்பட்டுள்ளது. தவறுகளை தவிர்ப்பதற்கான பல வழிமுறைகள் கண்டறியப்பட்டுள்ளன.

கையால் எழுதிய நுழைவுச்சீட்டு வழங்கிய காலகட்டத்தில் கூட நடக்காத தவறு தற்போது நடந்துள்ளதை பார்க்கும்போது, தேர்வாணைய அதிகாரிகளும் ஊழியர்களும் எந்த அளவுக்கு அஜாக்கிரதையாக செயல்பட்டுள்ளனர் என்பதை அறியலாம். மாணவர்களின் எதிர்கா லத்துடன் விளையாடும் இதுபோன்ற தவறுகள், இனியும் நடக்கக்கூடாது. அதற்கேற்ற வகையில் தொழில்நுட்பங்களை மேம்படுத்துவதோடு, மற்ற குறைபாடுகளையும் சீர்செய்வது அவசியம். அரசின் பல்வேறு துறைகளிலும், நேரடி ஆள்சேர்ப்பு என்பது அலுவலக உதவியாளர்கள், கடைநிலை ஊழியர்கள் என்ற அளவில் தான் உள்ளது. அவற்றை பெறவே, பலர் லட்சக்கணக்கில் பணம் செலவிடுகின்றனர். அதனால் தான், டி.என்.பி.எஸ்.சி., தேர்வில் பங்கேற்று அரசு வேலை பெற லட்சக்கணக்கானோர் முற்படுகின்றனர். எனவே, நிர்வாக ரீதியான தோல்விகளை தவிர்ப்பது கட்டாயம்.

# மீண்டும் செயல்பாட்டுக்கு வந்த சென்னை ஒன் செயலி!




சென்னை, பிப். 16–

மின்னணு பயணச்சீட்டு இயந்திரங்களில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்பக் கோளாறு காரணமாக சென்னை மாநகரப் பேருந்துகளில் மின்னணு பயணச்சீட்டு வழங்குவதில் தடை ஏற்பட்டுள்ளதாக சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகம் தெரிவித்தது.

தொழில்நுட்பக் கோளாறு சரிசெய்யப்படும் வரை நடத்துனர்கள், காகிதத்திலான பயணச்சீட்டுகள் மட்டுமே வழங்குவார்கள் என்றும் யுபிஐ, டெபிட் மற்றும் கிரெடிட் கார்டுகள் மூலமான பணப்பரிமாற்றங்களை ஏற்க இயலாது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் சென்னை ஒன் செயலி வழக்கம்போல் செயல்படுவதாக MTC விளக்கம் அளித்துள்ளது. தங்கள் பயணங்களுக்கான டிக்கெட்டை தடையின்றி பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தி.மு.க., கூட்டணியில் ஐந்து தொகுதிகள் கேட்கிறது மனித நேய மக்கள் கட்சி!



சென்னை, பிப். 16–

‘‘தி.மு.க., கூட்டணியில், ஐந்து தொகுதிகள் கேட்க உள்ளோம்,” என, மனித நேய மக்கள் கட்சி தலைவர் ஜவாஹிருல்லா தெரிவித்தார்.

அக்கட்சியின் சிறப்பு பொதுக்குழு கூட்டம், சென்னை, ராயப்பேட்டை ஒய்.எம்.சி.ஏ., மைதானத்தில் நடந்தது.

கூட்டத்துக்கு பின், ஜவாஹிருல்லா அளித்த பேட்டி: பொதுக்குழுவில், முஸ்லிம்களுக்கான இட ஒதுக்கீட்டை, 3.5 சதவீதத்தில் இருந்து 5 சதவீதமாக உயர்த்த வேண்டும் என்பது உட்பட, 19 தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

மத்திய பா.ஜ., அரசு பல்வேறு நெருக்கடிகளை தந்தாலும், பல்வேறு துறைகளில் தமிழகம் உயர்ந்து நிற்கிறது. எனவே, தி.மு.க., ஆட்சி, தமிழகத்தில் தொடர வேண்டும்.

தற்போது சட்டசபை மற்றும் பார்லிமென்டில், சிறுபான்மை முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் குறைகிறது.

சட்டசபை தேர்தலில், சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்களை, தி.மு.க., மற்றும் இதர கூட்டணி கட்சியினரும், வேட்பாளர்களாக நிறுத்த வேண்டும்.


தி.மு.க., கூட்டணியில், மனித நேய மக்கள் கட்சிக்கு, ஐந்து தொகுதிகள் ஒதுக்குமாறு கேட்டு, தீர்மானம் நிறைவேற்றி உள்ளோம்.

கடந்த தேர்தலில், தி.மு.க., ஒதுக்கிய மணப்பாறை, பாபநாசம் தொகுதிகளில், 100 சதவீதம் வெற்றி பெற்றோம். எனவே, ஐந்து தொகுதிகள் கோரிக்கையை, தி.மு.க., தலைமை பரிசீலிக்கும் என, எதிர்பார்க்கிறோம்.

ஆட்சியில் பங்கு, அதிகாரத்தில் பங்கு என்பது தமிழகத்திற்கு பொருந்தாது.

இவ்வாறு அவர் கூறினார்.


# தங்கம் விலை குறைந்தது...!



சென்னை, பிப். 16–

சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.960 குறைந்து, ஒரு சவரன் ரூ.1,15,520–க்கு விற்பனை செய்யப்படுகிறது. கிராமுக்கு ரூ.120 குறைந்து, ஒரு கிராம் 14,440–க்கு விற்பனை செய்யப்படுகிறது. வெள்ளி விலை கிராமுக்கு ரூ.15 குறைந்து ஒரு கிராம் ரூ.265–க்கு விற்பனையாகி வருகிறது. ஒரு கிலோ ரூ.2 லட்சத்து 65 ஆயிரத்துக்கு விற்பனை செய்யப்படுகிறது.

# தமிழக மீனவர்கள் 25 பேர் கைது - இலங்கை கடற்படை அட்டூழியம்!



சென்னை, பிப். 16–

எல்லை தாண்டி மீன் பிடிப்பதாகக் கூறி தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையால் கைது செய்யப்படும் சம்பவம் தொடர்ந்து நிகழ்ந்து வருகிறது. அதோடு மீனவர்களின் விசைப் படகுகளைப் பறிமுதல் செய்து அரசுடைமையாக்குவது போன்ற நடவடிக்கைகளையும் இலங்கை அரசு மேற்கொண்டு வருகிறது.

இதனால் மீனவர்களின் வாழ்வாதாரம் வெகுவாக பாதிக்கப்படும் சூழலும் நிலவி வருகிறது. இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட தமிழக மீனவர்களையும், அவர்களது படகுகளையும் விடுவித்திட வலியுறுத்தி முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின், பிரதமர் மோடி மற்றும் மத்திய வெளியுறவுத்துறை மந்திரி ஜெய்சங்கருக்கு தொடர்ந்து கடிதம் எழுதி வருகிறார்.

இந்த நிலையில், எல்லை தாண்டி மீன்பிடித்ததாக தமிழக மீனவர்கள் 25 பேரை இலங்கை கடற்படை கைது செய்துள்ளது. 2 விசைப்படகுடன் கைதான 25 மீனவர்கள் காங்கேசன்துறை முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். அங்கு அவர்களிடம் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. விசாரணைக்குப் பின் மீனவர்கள் யாழ்ப்பாணம் மீன்வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படுவதாக தகவல் வெளியாகியுள்ளது.


# தேவை

தமிழகத்தில் இயங்கி வரும் பிரபல தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழுக்கு, தமிழகம் முழுவதும் துடிப்பும், ஆர்வமும் மிக்க இளைஞர்கள் செய்திகள் சேகரிக்க மற்றும் புகைப்படம் எடுக்க தேவை.

தொடர்புக்கு:
செல் : 7904806432
போன்: 0452 – 4916699


Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020